From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 19/2021

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : அஜ்மீத் காஜா | Father/Husband Name | : சக்கரை முகமது |
| Age | : | Calling | : |
| Date | : 19.11.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19 day of 11.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் அட்டபட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் லாரி வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் டிப்பர் லாரி பதிவெண் TN 21 AJ 0688 என்ற வாகனத்தின் உரிமையாளர் ஆவேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் மேற்படி எனது வாகனத்தின் டிரைவராக வேலை பார்த்து வந்தார். 29.08.2020ம் தேதி கீழவளவிலிருந்து பாண்டாங்குடி நோக்கி லாரியை லோடு ஏற்றி சென்றுகொண்டிருந்தபோது பாண்டாங்குடி விலக்கு அருகே இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்படுத்தியதாக எனக்கு கொட்டாம்பட்டி போலீசார் சுமார் இரவு 07.00, 08.00 மணிக்கு போனில் தகவல் சொன்னார்கள். நான் மேற்படி எனது வாகனத்தின் வாகனம் சம்மந்தப்பட்ட ஆவணங்களை எடுத்துகொண்டு கொட்டாம்பட்டி காவல் நிலையத்திற்கு மறுநாள் காலையில் சென்றேன். நான் வாகனம் சம்மந்தப்பட்ட எடுத்துச்சென்ற ஆவணங்களை போலீசார் விசாரணைக்காக கொடுத்தேன். நான் விசாரித்தபோது சம்பவ இடத்திலேயே இருசக்கர வாகனத்தை இறந்துவிட்டார் என்று தெரிந்துகொண்டேன். இதுசம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி ஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய லாரி திரும்பியபோது இரு சக்கர வாகனம் வந்து மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேனா என்றால் சரிதான், விபத்து ஏற்படுத்திய லாரியின் பின் டயருக்கு பின்னால் லாரியின் பின் பகுதியில் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன்.

மறுவிசாரணை இல்லை